786

உணர்வூட்டும்

# இஸ்லாமிய கீதங்கள்

உருவாக்கம்

## "இளங்கலைஞன்"

வெளியிடுவோர்:-

"பைத்துல் முபாரக் நூல் நிலையம்"

18, முஸ்லிம் கொலனி,

வெலிப்பன்னை.


அச்சியற்றியோர்:-

வித்தியாவிலாஸ அச்சகம்

அளுத்கம வீதி,

மத்துகம



Kaavya Pradeepa, vidyanikethana, Kalabooshanam
AL.Haj A.H.M. ATHTHAS
J.P. (ஜ).15/1/3/6/95), S.L.P.S. Grade I (Rtd.),
Dip in Journalism (Colombo University),
No. 41, Arafath Akham, Muslim Road, Welipenn

வெளியீடு இல: 1

விலை 25 சதம்.

## பதிப்புரை

வல்ல நாயனுக்கே புகழனைத்தும் உரியது
அஸ்ஸலாமு அலைக்கும்

எமது நூல் நிலையம் இத்தகு ஆக்கப் பணி புரிய வேண்டும் என்ற பெருவிருப்பு. ஆர்வத்தால் உந்தப்பட்டு "இளங் கலைஞன்" அவர்களை அணுகினேன். அவரின் பாடல்களை எமது வெளியீடாகக் கொண்டுவர இசைவு தந்தார். ஆனால் ஒன்று; தன்னிடம் பாடல்களைச் சேர்த்து வைக்கும் பழக்கமில்லையாதலால், கைவசம் பாடல்கள் இல்லை என்னார் அவ்வப்போது 'இளங்கலைஞன்" அவர்கள் யாத்த பாடல்களை ஆங்காங்கிருந்து தேடிப்பெற முற்பட்டேன். குறுகிய காலத்தில் நடந்த முயற்சியாதலின் கிடைக்கப் பெற்ற சில பாடல்களையே இவ்வெளியீடாகப் பிரசுரம் செய்துள்ளேன்.

பொது மக்களின் ஒத்துழைப்பு எமக்கு நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு எமது அடுத்த முயற்சிக்கு உங்கள் ஒத்துழைப்பே காலாக அமையும்.

எமது பெருவிருப்பு இவ் வெளியீடாகக் கரங்களில் தவழ விளம்பரதாரர்களின் ஆதரவும் காரணமாகும். அவர்களுக்கு எம் நன்றி, பாடல்களை வெளியிட இசைவு தந்த "இளங் கலைஞன்" அவர்கட்கு எமது இதயங் கனிந்த நன்றி உரியது.

எமது நோக்கத்தை இவ் வெளியீடு பூரணமாக நிறைவேற்றவில்லை யெனினும், மூஸ்லிமானோர்க்கு ஏற்பட வேண்டிய உணர்ச்சி இவ் வெளியீட்டின் பயனாகப் படிப்பவர் மனதில் ஒரு சிறிதளவேனும் ஏற்படுத்தப்படின் அதுவே எமக்கு மகிழ்ச்சி தருவதாகும்

இங்ஙனம்,

10. 10 69

அன்பின் ஏ. எம். அஸ்ஹார்

பாட்டு 1

படம்: தேஸ்தி· பாட்டு: கொயிஜப்ராறெஜ பாடுயே
எ மெ.

இளையோர்கள் நாமே – ஒன்று சேருவோமே
சமூகம் உயர்வு காண்பதற்கே
நலிவு நிலை போக்கிடவே

இளையோர்கள்

ஓர் அணியாய் நின்றிடுவோம்
ஒற்றுமையைப் பேணிடுவோம்
பிரிவினை நீக்கி நற்பலம் பூண்டே இளையோர்கள்

உரிமைகளைப் பேணிடுவோம்
தியாகங்களைப் புரிந்திடுவோம்
பொது நல நாட்ட மனங் கொண்டே

இளையோர்கள்

பழம் பெருமை நோக்கிடுவோம்
பல் கலைகள் தேறிடுவோம்
பாங்குறு சமூகமாய் மாற்றிடவே இளையோர்கள்

துணிவு தனை ஏந்திடுவோம்
தீரர்களாய் மாறிடுவோம்
நாவன்மை செயல் வன்மை கொண்டோர்களாய்

இளையோர்கள்

---

ஆண், பெண், முதியோர், இளைஞர், சகலருக்கும் தேவையான
புடைவை வகைகளுக்கு விஜயம் செய்யுங்கள்

ஏ· எம்· எப். யூசுப்

36, மெயின் வீதி – வெலிப்பன்னை.

---

பாட்டு 2

படம்: பெற்றால் தான் பிள்ளையா?

பாட்டு: நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி

எ. மெ:

வல்ல வனாய் வாழ்ந்திட எண்ணி – நல்ல
கல்விகள் பெற்றிடு தம்பி
இறை மறை வழி தனை நம்பி
நெறி முறை களை வகுத்திடு தம்பி

வல்லவனாய்

முஸ்லிம் சமூகமே முதன்மையானது
முன்னோர்கள் வழியினை முழுதும் கொண்டது
உயர்ந்த நிலையிலே என்றும் உள்ளது
என்னும் புகழினை மீண்டும் காணவே

வல்லவனாய்

முன்னை முஸ்லிமின் முயற்சி போலவே
முழுதும் கற்று நாம் உயர்ந்து செல்லவே
உண்மைச் சரிதமே உவந்து படிப்பதால்
உணர்ச்சி கொண்டு நாம் எழுச்சி காணலாம்

வல்லவனாய்

உலக நாடுகள் மேன்மை காணவே
உற்ற சாஸ்திரம் காட்டி நின்ற நம்
சமூக நிலையின்று வீழ்ந்து நிற்குதே
மலர்ச்சி காணவே முயற்சி பேணுவாய்

வல்லவனாய்

நபிகள் வாழ்வினைக் கூர்ந்து நோக்கிடு
நிறைந்த கொடுமைகள் வகுத்தி நிற்கவே
உண்மை வேதமே நிலைக்கச் செய்தனர்
உயர்ச்சி நாடினால் இடர்கள் தோணலாம்

வல்லவனாய்

பாட்டு 3

அஹதாலிவின் பூரணமாய் எ. மெ.

குவலயம் போற்றும் ஏந்தல் ஜோதி
குத்புல் அக்தாப் எம் கோனே

குவலயம்

அடைந்தேன் நும் புகழ் பாடும் தலமே
அடியேன் துயர் தீரும் நாதா
ஜீலான் பதியில் பிறந்த நாதா
ஜெகத்தோர்க் கருளும் நாதா

குவலயம்

இறையோனின் அருள் கொண்ட நாதா
மறை வழியைக் காட்டும் நாதா
திருடர்கள் கூட்டம் தனை
திருந்திடச் செய்திர் நாதா

குவலயம்

தீன் மார்க்கம் தழைத் தோங்கிடவே
திரு வாழ்வு புரிந்திர் நாதா
எம் மனம் தெளிந்து நின்றே
இக வாழ்வுக்கருளும் நாதா

குவலயம்


Noon Tex Garments Industries.

Leadies & Jends Handkerchiefs
Distributors:-

Prop:- M. J. M. HANIFFA
Muslim Road
Welipenna.

பாட்டு 4

படம்: நெஞ்சிருக்கும் வரை

பாட்டு: எங்கே நீயோ நானும் எ. மெ.

வேத மறையில் கூறும் போக்கில் அதனோடு
அதில் தானே நின்று கொள்வோம் நாம் ஒன்றாக
நபி வழியாக

வேதமறையில்

உலகினிலே உயர் வாழ்வு காண ஒத்திருப்போம்
மறுமையிலே நற்பேறினைப் பெறவே பொறுத்திருப்போம்
மண்ணில் தீங்கில் மூழ்காமல்
வீணாய்த் துயரம் காணாமல்
உலகை எண்ணி வாழாமல்
இறைக்கென நாம் வாழ்வோம்

வேத மறையில்

போதம் தரும் நபி வாக்குகள் யாவும் புனிதம் தரும்
போற்றிடுவோம் நம் வாழ்வில் இறையும் அருள் புரியும்
பாழும் நிலைமை நீக்கிடுவோம்
பாரில் சிறந்தே இருந்திடுவோம்
இன்றே இறைவழி பற்றிடுவோம்
இறைக்கென நாம் வாழ்வோம்

வேதமறையில்


## வெலிப்பன்னையில்

கார், சைக்கிள் திருத்த வேலைகட்கும் சைக்கிள் உபகரணங்கட்கும்,
பெற்றோல்மெக்ஸ் திருத்தவேலைக்கும்,

நாடுங்கள்:–

**" ஹம்பர் ஹவுஸ் "**

உரிமை: A. S. M. மக்கீன்
மெயின் வீதி – வெலிப்பன்னை.

பாட்டு 5

படம்: எங்க பாப்பா

பாட்டு: ஒரு மரத்தில் குடியிருக்கும் எ. மெ.

நம் மதத்தின் போதனைகள் என்றுமே ஒன்று
அது மாற்றம் கொள்ளாது
மனச் சாந்தி தருவது
நெறி முறையைச் சொல்வது
நல் வாழ்வைத் தருவது — நம் மதத்தின்

குர் ஆன் ஹதீஸ் சேர்ந்துகாட்டும் போதமும் ஒன்று
இரண்டு வகையில் நாங்கள் காணும் வழிகளும் ஒன்று
விரிவாய் நின்று விளக்கம் தருது ஹதீஸ் என்பது
குர் ஆன் தனில் இறையின் வாக்கு முழுதும் உள்ளது
நம் மதத்தின்

பாருலகில் நன்கு வாழ வழியுமில்லையா ?
வேதமிருந்தும் நமக்கு அந்த நினைவு நல்லதா ?
மதத்தில் நின்றும் வாழ்வை வேறு வழியிற் கொள்வதா ?
நபிக்குச் செய்யும் நன்றி கூட எதுவுமில்லையா ?
நம் மதத்தின்

---

எதிர் பாருங்கள் !

கூடிய சீக்கிரம் தயாராக இருக்கின்றன திறம் லங்கா சாரன்கள்

"Jaseela Sarongs"

Muslim Colony – Welipenna.

பாட்டு 6

படம்: மேஜர் சந்திரகாந்த பாட்டு: ஒரு நாள் யாரோ எ. மெ.

அது நாள் அங்கே
நபி நாதர் வந்துதித்தாரே
பாருக்குள் சோகம்
பாலைக்குள் ஓலம்
நின்றிட்டதுரைத்திடுவாய் நீ

அது நாள்

பாரும் விழித்தது மெல்ல
அவர் மார்க்கத்தின் வழியினிற்செல்ல
சொல்லத் திறந்தது இதயம்
மெய்யினில் வாவென அழைத்திட நபியும்
தடுத்திட முனைந்தனர் பகைவர்
எட்டி நின்றிடாது உழைத்தனர் தூதர்

அது நாள்

சொல்லத் தொடுத்தனர் போதம்
எங்கும் பரந்தது இறைவனின் வேதம்
நம்மைத் திருத்திடும் மொழிகள்
நாடிட எத்துணை எத்துணைக் கனிவு
இவ்விடம் சொல்லிட நினைக்கும்
உளம் விண்ணிலே ஆடிப் பறக்கும்

அது நாள்

YOU ARE IN LUCK'S WAY TO GET THES STILL

Plastic Rain Coats For Your Anare Family D .I. S. Supporters DURO Soutcase Handkerchiefs And Baby Wool

Distriburters:-

A. W. M. SALAM
Mosque Road,
Welnoma.

பாட்டு 7

படம்: பூவும் பொட்டும். பாட்டு: எண்ணைப் போல

கண்ணன் எ. மெ.

என்னசெய்து வாழ முனைந்தாய் அம்மம்மா
எங்கு நீயும் போக வேண்டும் அம்மம்மா
நன்கு மனதில் தெளிந்து கொள்வாய் அம்மம்மா
நாளை மறுமை நாடிடுவாய் அம்மம்மா

என்னசெய்து

அண்ணல் நபியின் வழி தொடுத்து
இறைமறைதனை இங்கு நாடி எடுத்து
எம்மில் இலங்கும் இன்ப வாழ்வு
என்றும் காண நன்றாய்க் காண ஒன்றாய் இனிது
பண்பு வழியில் நன்கு திகழ்ந்து
எண்ணி உணரும் காலம் வருமோ ?

என்னசெய்து

அண்ணல் வழியில் முன்னோர் இருந்தார்
நம்மில் பலர் வேறு நிலையை நம்பியிருந்தார்
மறைவழியில் முன்னோர் இருந்தார்
நம்மில் பலர் மறைதனை நாட மறந்தார்
அண்ணல் வழியே மறை உருவம்
மறை மொழியே அண்ணல் வழியும்

என்ன செய்து

பாட்டு 8

படம்: இரு வல்லவர்கள் பாட்டு நான் மலரோடு

எ. மெ.

நம் பெண்கள் போக்இன்று ஏனிந்த கோலம்
முஸ்லிம்கள் சமூகத்தில் இஃதென்ன ஓலம்

நீ வந்திட்ட முன்னோர்கள் வழியென்ன காண்பாய்
வகையாக யார் உன்னை வழிமாற்றம் செய்தார்
மினிஸ்கட்டும் டைட்ஸ்கட்டும் பெண்கட்கு நன்றா
பெண்மையின் புனிதத்தை விலை கூறல் இன்றா ?

நீ வந்திட்ட

உன் உதட்டினில் ஏன் இந்தச் சாயத்தை இட்டாய்
தன் இடையினைக் காட்டியே புடைவையை அணிந்தாய்
தத்தி நீ நடப்பதன் நாட்டத்தை உணர்வாய்
தடுக்கியே வீழ்ந்திடத் தவிப்பென்ன கொண்டாய் ?
நம் பெண்கள்

முக்காடு போட்டங்குப் படம் பார்த்தல் முறையா
முட்டியே ஆண் மேனி மோகங்கள் கொண்டே
நைலோனை அணிந்தே நல் அங்கங்கள் எல்லாம்
நைஸாக வெளிக் காட்டும் நாய்ரீகம் என்ன ?
நம் பெண்கள்

பாட்டு 9

படம்: நானும் ஒரு பெண் பாட்டு: கண்ணு கருமை
எ மெ.

நபியே - நம் புனித நபியே - மக்கா
நகரினில் வந்தார்களே
அக்காலே அங்கு அறியாமையினால் - அக்
கிரமங்கள் விளைந்தனவே
நபியே

அத்தனையும் அகன்றிடச் செய்தார்களே
அல்லாவின் ஏவலைப் போதித்தே தான்
நபிமாரின் வரிசையில்
முதலுமாய்
பெருமானும் வந்தார்கள்
கடைசியதாய்
நபியே

நாநிலம் சிறக்கவே பெருமானையே - நல்
தாயனும் தந்திட்டான் நல்லருளால்
இஸ்லாமாம் ஏவலைச்
சிறப்புறவே - இங்குப்
பகர்ந்தார்கள் முழுதையும் பூரணமாய்
நபியே

## பாட்டு 10

[விரும்பிய மெட்டில் பாடலாம்]

சீர் மிக விளங்கும் இடமதாம்
செம்மையாய் ஒழுங்கும் பேணுமிடம்
ஐயவான் பர்பலி பதி மாளிகாச்
சேனையில் புஹாரித் தக்கியாவாம்

செய்கு முபாரக் ஒலியவரின்
சீசராம் செய்கு முஸ்தபா வழியைச்
சிறப்புறப் போற்றும் தலமாம்
வரிசை என்றும் அங்கு நிலவுமாம்

தூய ஹதீஸ்கள் நிறைந்ததுவாம்
ஹஹீஹ் புஹாரீயதைப் பூரணமாய்
சாற்றும் புனிதப் பணியதையே
சங்கையாய் நடத்தும் தலமது

இறுதி நபிகள் பேரில் மௌலூதும்
சிறப்புற ஓதுவர் அங்கே தாம்
கௌதுல் அஃலம் பேரிலுமே
கண்ணியமாய் நடத்துவர் நன்கு

ரூத்தீபு இக்றுகள் சீராய் மிகப்
பக்தி நிறையத் துலங்குமாம்
பார்ப்போர் மனம் கவரச் செய்யும்
பங்கு நாளும் இங்குப் பெறலுடியும்

சக்தி மிகுந்த அத்தலமதின்
பெருமை சொல்லில் அடங்குமோ ?
இறை கிருபை கிடைக்குமிடம்
இனிதாய் நாமும் பெறச் செல்வோம்

# KALA JEWELLERY INDUSTRIES

Muslim Road, WELIPENNA.

அசல் பவுண் வெள்ளி நகைகளுக்கு பிரசித்தி பெற்ற நகை
மாளிகை கை வசமிருக்கும் கீழ் கண்ட நகைகளை
கீழ் குறிப்பிட்ட விலையில் பெற்றுக்கொள்ளலாம்,

| | | |
|---|---|---|
| ★ No. 1. ஜெயலலிதா செட் | — | 122 - 50 |
| ★ 2 ஜீவராணி செட் | — | 105 - 00 |
| ★ 3 மீனகுமாரி செட் | — | 95 00 |
| ★ 4 பத்மினி செ | — | 77 - 50 |
| ★ 5. விஜயா செட் | — | 65 - 00 |
| ★ 6 வையந்திமாலா செட் | — | 55 - 00 |
| ★ 7 சந்தியகுமாரி செட் | — | 47 - 50 |
| ★ 8 நிர்மலா செட் | — | 40 - 00 |
| ★ 9. ராஜேஸ்வரி செட் | — | 40 - 00 |
| ★ 10. விஜயகுமாரி செட் | — | 32 - 50 |

ஒவ்வொரு செட்டுக்கும்,

ஒரு நெக்லஸ், ஒரு தோடு
தொங்கட்டான்
காப்பு, ஒரு கொண்டைப் பூ
ஒரு மோதிரம், ஒரு சேலை கவடி டஸல்
ஒரு சேலைப் பின்.
ஆகிய 7 பாகங்களைக் கொண்டது

## இவைகளுக்கு தங்க முலாம் பூச
## ரூபா 8-50 அறவிடப்படும்.

10/= முன்பணத்துடன் கூடிய வி. பி, பி.
ஆடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்

மேலும் விபரங்களுக்கு 10, சத முத்திரையுடன் கீழ் காணும்
விலாசத்திற்கு எழுதவும்.

## கலா ஜுவலரி இன்டஸ்ரீஸ்

முஸ்லிம் ரோட் - வெலிப்பன்னை